www.tamilarangam.net

# LANDESKRIMINALAMT BADEN-WÜRTTEMBERG

## மேற்கு ஜெர்மனியில் புலி இயக்கத்தைச்சார்ந்த தமிழர்களின் சட்டவிரோதமான செயற்பாடுகள்

மதிப்பிற்குரிய ஜெர்மன்வாழ் இலங்கைத்தமிழ் மக்களே!

உங்கள் தாயகத்தில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக நீங்கள் மேற்குஜெர்மனிக்கு வந்து இங்கு புகலிடம் தேடவேண்டியதாயிற்று. உங்களில் பலர் உங்கள் குடும்பத்தினரோடு இங்கு புதிய வாழ்க்கையை அமைக்கத் தொடங்கியுள்ளீர்கள். உங்களைச்சார்ந்த மக்களின் மத்தியிலிருந்து எங்களுக்கு வந்துள்ள தகவல்களிலிருந்து ஒரு பிரச்சினை– அதாவது உங்களில் பலரை பாதித்துக்கொண்டுள்ள பிரச்சினை– எங்களுக்குத் தெரியவந்துள்ளது.

இலங்கை நாட்டு மக்களிடமிருந்து எங்களுக்கு வந்துள்ள, ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்றின் தமிழ் மொழிபெயர்ப்பு கீழே தரப்பட்டுள்ளது:

"நாங்கள் இலங்கை நாட்டிலிருந்து இங்கு வந்து மேற்கு ஜெர்மனியில் வாழ்ந்து வருகிறோம். சிறுபான்மையினரான எங்களுக்கு இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றி உங்களுக்கு அறியத்தருகிறோம். எங்களுக்கு இந்நாட்டில் மொழிப்பிரச்சினை மட்டுமின்றி எங்கள் நாட்டை சேர்ந்த தீவிரவாதிகளின் பிரச்சினையும் கூட. இலங்கையில் எங்களின் உயிருக்குப்பயந்து, எங்கள் உயிரைப்பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கு ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தோம். ஆனால் இங்கும் பயந்து வாழவேண்டிய புதிய நிலைமை உருவாகியுள்ளது. நாங்கள் மீண்டும் ஏன் பயப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதை தங்களுக்கு விளக்கப்படுத்த விரும்புகிறோம்:

இலங்கை நாட்டில் உள்ள பிரச்சினைகள் பற்றி யாவரும் அறிந்ததே... ஜெர்மனியில் புதிய தலைமறைவு இயக்கம் ஒன்று தோன்றியுள்ளது. இவர்களின் குறிக்கோள் சொநத நாட்டு மக்களையே மிரட்டுதல் ஆகும். இந்தக்கூட்டத்தினருக்கு காசு தேவை, அதாவது மேற்கு ஜெர்மனியில் ஒரு பெரிய பயங்கரவாத அமைப்பு ஒன்றை அமைப்பதற்கு. நாங்கள் இதை... பணம் கொடுத்து வளர்க்கவேண்டுமாம்.

இந்த நபர்கள் வீடு வீடாகச்சென்று சொந்தநாட்டு மக்களிடம், அதாவது சமூகநல உதவியில் (சோசியல் உதவி) வாழ்ந்துவருபவர்களிடம் காசு தருமாறு கேட்கிறார்கள். அவர்கள் விருப்பம் நிறைவேற்றப்படாவிடில் பலாத்காரம் உபயோகிக்கப்படும் என்று பயமுறுத்தப்படுகிறது. இவர்கள் ஊர் ஊராகச்சென்று இலங்கையைப்பற்றிய கூட்டம் என்று கூறி "போலி மீட்டிங்" களுக்கு ஏற்பாடு செய்கிறார்கள்.... ஒவ்வொரு ஊரிலும் ஒரு நபரை காசு சேர்ப்பதற்கு பொறுப்பாக தெரிவு செய்கிறார்கள்– பலாத்காரமான முறையிலும் காசு சேர்க்கத்தான்... "

கடந்த சில நாட்களில் நீங்கள் செய்தித்தாள்கள், ரேடியோ, டீ.வி மூலமாகவும் அல்லது உங்கள் நாட்டு நண்பர்கள் மூலமாக புலி இயக்கத்தினருக்கு எதிராக மே. ஜெர்மனியில் உங்கள் நாட்டு மக்களை மிரட்டியதற்காகவும், அடித்து துன்புறுத்தியதற்காகவும் ஜெர்மன் குற்றவழக்கு–மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்திருப்பீர்கள். போலீஸாரின் முக்கியமான கடமைகளில் ஒன்று உங்களுக்கு ஜெர்மனியில் எந்தவிதமான இடையூறும் இன்றி வாழ போதிய பாதுகாப்பும், நிம்மதியும் அளிப்பதுதான்– அதாவது உங்கள் உடலுக்கும், உயிருக்கும் எவ்வித ஆபத்தும் இன்றி இங்கு வாழும் சூழ்நிலையை உருவாக்கித்தருவதுதான்.

ஆகவே உங்களுக்கு எங்களது வேண்டுகோள்:

உங்களுக்கும் மேற்கூறியது போன்ற அனுபவங்கள், பிரச்சினைகள் புலி இயக்கத்தினரால் ஏற்பட்டிருப்பின் தயவு செய்து உங்கள் இடத்திற்குப் பொறுப்பான போலீஸ் நிலையத்தை நம்பிக்கையோடு அணுகுங்கள்.

வெளியிட்டோர்: மாநில குற்றப்பிரிவு காரியாலயம்
டாவ்பன்கைம் ஸ்ட்ராஸே 85
7000 ஸ்டுட்கார்ட் 50

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்